# DIVINE MOTHER SOCIETY
# CHENNAI
## குரு ஸ்லோகம்

ஸ்ரீ தத்தாத்ரேயர், ஷிர்டி சாய், சக்தி, ஸ்ரீ சக்ரம் இவைகளுடன் ஆரம்பம்

1) ஆதௌ ப்ரம்ஹா மத்யே விஷ்ணு :
அந்த்யோ தேவ சதாசிவ :!

மூர்த்தி: த்ரய ஸ்வரூபாய தத்தாத்ரேய
நமோஸ்துதே !!

2) லா இலா இல்லல்லாஹ் முஹம்மது
ரஸுலல்லா ஏ அல்லாஹ் பிஸ்மில்லா
அல்லாஹ் மாலிக்

3) ஓம் ஸ்ரீ பீடே சுரபூஜிதே
மஹாசக்தி, மஹாமாயே,
ரௌத்ரிகா, மாம்ஸபக்ஷிணி
ஸ்ரீ சங்க சக்ர கதாதாரே,
கருடாரூடே, டோலாசுர பயங்கரீ
சர்வபாபஹரே தேவீ, சர்வதுஷ்டபயங்கரீ
சர்வக்ஞே, சர்வவரதே, நவகண்ட மஹாகாளீ
சண்டிகே, ரக்தப்ரியே, யோகசித்த ஸ்வரூபிணீ
ருத்ர பூ மஹேஸ்வரீ
ப்ரதமம் பாரதீ நாம
த்விதீயம் ச ஸரஸ்வதீ
த்ருதீயம் சாரதா தேவீ
சதுர்த்தம் ஹம்ஸவாஹினீ
பஞ்சமம் ஜகதிக்யாதா
ஷஷ்டமம் மஹாகாளீ
ஸப்தமம் கௌமாரீ
அஷ்டமம் ப்ரம்ஹசாரிணீ
நவமம் புத்திதாத்ரீ ச
தசமம் ஸித்திநாயகீம்
ஏகாதசம் ருத்ரசக்தினீம்
த்வாதசா புவனேச்வரீம்
தஸ்ய ப்ரஸன்ன வர பரமேஸ்வரீம்

ரக்த மால்யாம்பராம் தேவீம்
தசபாஹு த்ரிலோசனீம்
மாதா சரணம் (3 தடவை)

4) ஓம் ஹ்ரீம்காராஸன கர்ப்பிதா (அ)னல சிகாம்

ஸௌ; க்லீம் கலாம் பிப்ரதீம்

ஸௌவர்ணாம்பரதாரிணீம் வரஸுதாதௌதாம்

த்ரிநேத்ரோஜ்வலாம் !

வந்தே புஸ்தக பாசமங்குசதராம்

ஸ்ரக் பூஷிதாம் உஜ்ஜ்வலாம்

த்வாம் கௌரீம் த்ரிபுராம் பராத்பரகலாம்

ஸ்ரீ சக்ர ஸஞ்சாரிணீம் (3 தடவை)

(கீழ்க்கண்ட ஸ்லோகம் குருஜியினால் மட்டும் சொல்லப்பட்டு வந்தது. இதை அடுத்து எல்லோராலும் குரு மந்திரம் சொல்லப்படும்)

5) ப்ரம்ஹானந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்

விச்வாதீதம் ககனஸத்ருசம் தத்வமச்யாதி லக்ஷ்யம்

ஏகம் நித்யம் விமலம் அசலம் சர்வதீஸாக்ஷி பூதம்

பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும் த்வம் நமாமி

# குரு மந்திரம்

ஞானத்தின் மொத்த உருவமாக இருந்தபோதிலும், ஆதி சங்கரர் மிகச்சிறிய வயதிலேயே குருவின் மூலமாக அல்லாமல், தாயாரிடமிருந்து தற்காலிக சந்நியாசம் மேற்கொண்டார். ஆனாலும், தக்க குரு இருந்தால்தான் அவரது நிஷ்டைக்கு பலிதம் என்று அறிந்தார். வேதவியாசரே கனவில் வந்து அவரை ஸ்ரீகுரு கோவிந்த பாதரை தேடிப்போய் அவரை குருவாக ஏற்றுக்கொண்டு உபதேசம் பெற்றுக்கொள்ளுமாறு பணித்தார். ஸ்ரீகுரு கோவிந்த பாதரை, நர்மதா நதி தீரத்தில் கண்ட போது அவர் ஆழ்ந்த யோக நிஷ்டையில் இருப்பதைப் பார்த்தார். ஸ்ரீகுரு கோவிந்த பாதரின் மற்ற சீடர்கள் அவர் வெகு நாட்களாக அப்படி இருப்பதாகவும், இன்னும் எத்தனை காலம் அந்நிலையில் இருப்பார் என்பதும் நிச்சயமில்லை என்றும் கூறினர். குருவைக் கண்ட களிப்பில் ஆதி சங்கரர் பரவசத்துடன் அவரை பின்வரும் ஸ்லோகங்களால் துதிக்கிறார்.

1. *நித்யாநந்தாய தத்தாய நிர்மலாய சிதாத்மனே |*
   *ஞானோத்மாய குரவே தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||*

பரமானந்த நிலையில் ஒருவன் ப்ரம்மத்துடன் ஒன்று படுகிறான். நினைவுள்ளவனாயிருந்தும், தன் சுற்றுப்புறத்தில் நடப்பதைப் பற்றி ஒன்றுமே அறியாத மோன நிலையில் நினைவிழந்து ஆனந்ததத்தில் திளைத்திருப்பதே நிர்விகல்ப சமாதி. அப்படிப்பட்ட பரமானந்த நிலையில் உள்ளவரே, புத்தியில் அவதூத நிலையை அடைந்தவரே, நிர்மலமானவரே, அனைத்திலும் உள்ளவரே, உள்ளிருந்தும் அப்பாற்பட்டவரே, ஞானத்தில் உத்தமமான குருவே, உமக்கு என்னுடைய நமஸ்காரங்கள்.

2. *அஞ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்சன சலாகயா |*
   *சக்ஷுருன் மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||*

அஞ்ஞானம் என்ற இருளால் மறைக்கப்பட்ட என் கண்களை ஞானம் என்ற மை தீட்டி திறப்பவர் எவரோ, அந்த குருவிற்கு என் நமஸ்காரங்கள்.

3. *குருர் ப்ரம்ஹா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஸ்வர: |*
   *குருஸ்ஸாக்ஷாத் பரப்பரம்ஹ: தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||*

ப்ரம்மஞ்ஞானத்தை படைப்பவர் மற்றும் அளிப்பவர் குருநாதரே. அதனால் அவரே ப்ரம்மன். சீடனை ஆபத்தில் இருந்து காப்பவர் குருநாதரே. அதனால் அவரே விஷ்ணு. அஞ்ஞானத்தை அழிக்கும் குருவே ஈஸ்வரன் என்று கூறுதல் மிகையாகாது. முத்தொழில்களையும் புரிந்து பரப்பிரம்மத்தை உணர வைக்கக்கூடிய, பரப்பிரம்ம ஸ்வரூபியான அந்த குருவிற்கு என் நமஸ்காரங்கள்.

4. *அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம் |*
   *தத்பதம் தர்ஷிதம் யேன தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||*

தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்ற பக்தனுடைய வார்த்தையை மெய்ப்பிக்க நரசிம்ம அவதாரத்தை எடுத்தது போன்று, குருநாதர் அண்ட சராசரங்கள் முழுதும் வியாபித்திருக்கிறார். அண்ட சராசரமாகவே விஸ்வரூபத்தில் திகழ்கிறார். அப்படியிருந்தும், பக்தர்கள் நினைத்த மாத்திரத்தில், தன் *(திருவடி)* தரிசனம் கொடுக்கக்கூயவர் எவரோ, அந்த குருவிற்கு என் நமஸ்காரங்கள்.

*5. ஞான சக்திம் சமாருஹ்ய தத்வமாலா விபூஷிணே |*
*குண நிர்குண ரூபாய தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||*

அளவற்ற ஞானமே தன் சக்தி எனக் கொண்டவரும், பரப்பிரம்ம தத்துவத்தையே ஆபரணமாகப் பூண்டவரும், ஸகுண பக்தர்களுக்கு ஸகுணமாயும், நிர்குண பக்தர்களுக்கு ஸாக்ஷாத் நிர்குண ப்ரம்மமாகத் திகழ்பவர் எவரோ அந்த குருவிற்கு என் நமஸ்காரங்கள்.

*6. குரு: சிவோ குருர்தேவோ குருர்பந்து : சரீரிணாம் |*
*குருராத்மா குருர் ஜீவோ குருரன்யம் ந வித்யதே ||*

ப்ரபஞ்சமே குருதேவரான பிறகு குருநாதரைவிட மேலானவரோ. வேறுபட்டவரோ எவர் இருக்க முடியும்? குருவையே நம்பி சார்ந்தவர்க்கு, அவரே ஈஸ்வரன்; அவரே தேவர்கள்; அவரே உற்றார், உறவினர்; அவரே ஆத்மா; அவரே ஜீவனுமாகி விடுகிறார்.

*7. ந சுகம் வேத சாஸத்ரேஷு சுகம் மந்த்ரயந்த்ரகே |*
*குரோ : ப்ரஸாதன்யத்ர சுகம் நாஸ்தி மஹீதலே ||*

குருவின் உபதேசம் இல்லையென்றால், வேத சாஸ்திரங்களைச் செவ்வனே பயில்வதனாலோ, மந்திர யந்திர கவச சக்கரங்க்ளால் பூஜை செய்வதாலோ பலன் ஏற்படுவதில்லை. குருவின் அனுக்ரஹத்தாலேயே செய்யும் பூஜைக்கு பலிதம் ஏற்படும். குருவின் ப்ரஸாதத்தை விட மேலானது ஒன்றுமில்லை; ஒன்றுமேயில்லை.

*8. ந குரோரதிகம் ந குரோரதிகம் ந குரோரதிகம் ந குரோரதிகம் |*
*சிவசாஸனதோ சிவசாஸனதோ சிவசாஸனதோ சிவசாஸனத : ||*

குருவைவிட மேலாவனர் ஒருவருமில்லை. இது சாக்ஷாத் ஈசுவரனுடைய கூற்று,

*9. விதிதம் விதிதம் விதிதம் விதிதம்*
*விஜனம் விஜனம் விஜனம் விஜனம் |*
*ஹரிசாஸனதோ ஹரிசாஸனதோ*
*ஹரிசாஸனதோ ஹரிசாஸனத; ||*

குருவின் அனுக்ரஹத்தால் விதியையும் வெல்லலாம். இது சாக்ஷாத் ஹரியின் கூற்று.

*10. ஏவம் விதம் குரும் த்யாத்வா ஞான முத்பத்யதே ஸ்வயம் |*
*ததா குரோபதேசேன முக்தோஹம் இதி பாவயேத் ||*

இங்ஙனம் குருவை தியானம் செய்தால் ஞானம் தன்னாலே உண்டாகும். தவிர குருவின் உபதேசத்தால் முக்தி கிட்டும்.

*(இத்துதியைக் கேட்ட ஸ்ரீகுரு கோவிந்த பாதர் கண் திறந்து, ஆதிசங்கரரை மலர்ந்த முகத்துடன் ஆசீர்வதித்தார்.)*

11. அம்பா சாம்பவீ சந்த்ரமௌலிர் அபலா அபர்ணா உமா பார்வதீ
காளீ ஹைமவதீ சிவா த்ரிநயனீ காத்யாயினீ பைரவீ |
சாவித்ரீ நவ யௌவனா சுபசுரீ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீப்ரதா
சித்ரூபி பரதேவதா மாதா பகவதி ஸ்ரீராஜராஜேஸ்வரி ||

12. மாதா ந்ருஸிம் ஹஸ்ச பிதா ந்ருஸிம்ஹோ
ப்ராதா ந்ருஸிம்ஹோ ஸகா ந்ருஸிம்ஹ: |
வித்யா ந்ருஸிம்ஹோ த்ரவிணம் ந்ருஸிம்ஹ:
ஸ்வாமி ந்ருஸிம்ஹோ ஸகலம் ந்ருஸிம்ஹ: ||

13. நித்ய ஆனந்தகரீ வராஅபயகரீ ஸௌந்தர்ய ரத்னாகரீ
நிர்தூதாகில கோர பாப நாசனகரீ ப்ரத்யக்ஷ மாஹேஸ்வரீ |
ப்ராலேயாசல வம்ஸ பாவனகரீ காசீ புராதீச்வரீ
பிக்ஷாந்தேஹி – (9 முறை)
க்ருபா வலம்பனகரீ மாதா அன்னபூர்ணேச்வரீ ||

14. இச்சா சக்தி ஞான சக்தி க்ரியா சக்தி ஸ்வரூபிணீ ||
மாதா காமாக்ஷி, பிதா காமாக்ஷி
ப்ராதா காமாக்ஷி, புத்ரம் காமாக்ஷி
ஸகலம் காமாக்ஷி, ஸர்வம் காமாக்ஷி ||

15. ஜகத்ஜனனி சுபவாணி கல்யாணி
ஜகத்ஜனனி சுபவாணி கல்யாணி
ஜகத்ஜனனி சுபவாணி கல்யாணி

தீபாராதனையின் போது, "ஓம் நமோ பகவதே வாசு தேவாய"